# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032

தொலைபேசி 044-22201337

மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in

இணையதளமுகவரி: www.tnlbo.tn.gov.in


முன்னிலை: திரு.மகேசன் காசிராஜன் இ.ஆ.ப (ஓ)

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண்.245/மா/2024

நாள் 13.02.2025

திரு. த. விக்னேஸ்வரன்
திருச்சி ......... முறையீட்டு மனுதாரர்

உதவிஆணையர்,
வார்டு குழு அலுவலகம் IV
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ........ எதிர் மனுதாரர்

திருச்சிராப்பள்ளி, கிராப்பட்டி, அருணாச்சல நகர், 5வது தெரு கதவு எண்.71 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.த.விக்னேஸ்வரன் என்பவரின் 11.01.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 12.01..2024 அன்று பெறப்பட்டு, 245/மா/2024, என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருச்சிராப்பள்ளி, கிராப்பட்டி, அருணாச்சல நகர், 5வது தெரு, கதவு எண்.71 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.த.விக்னேஸ்வரன் என்பவர் 11.01.2024 நாளிட்ட தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"திருச்சி மாநகராட்சி பொன்மலை கோட்டத்திற்கு உட்பட்ட

| | |
|---|---|
| அ) | வார்டு AB பிளாக் 9, நகரளவை எண்.1/1-ல் 0.2629.0 ச.மீட்டரும் |
| ஆ) | வார்டு AB பிளாக் 9, நகரளவை எண்.1/3-ல் 0.1833.0 ச.மீட்டரும் |
| இ) | வார்டு AB பிளாக் 1, நகரளவை எண்.1–ல் 2.5155.0 ச.மீட்டரும் |
| ஈ) | வார்டு AB பிளாக் 8, நகரளவை எண்.1–ல் 0.400.0 ச.மீட்டரும் |
| உ) | வார்டு AB பிளாக் 8, நகரளவை எண்.2–ல் 0.685.0 ச.மீட்டரும் |
| ஊ) | வார்டு AB பிளாக் 8, நகரளவை எண்.14–ல் 0.132.0 ச. மீட்டரும் |

ஆகிய ஆறு நகரளவை எண்ணில் உள்ள மாவட்ட நீதிமன்ற அருகில் உள்ள எம்.ஜி.ஆர். சிலை முதல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் பின்புறம் வரை உள்ள உய்யக்கொண்டான் வாய்க்காலில் திருச்சி மாநகராட்சி பொன்மலை–கோட்ட இளநிலை பொறியாளர் திரு.பாவா பக்ருதீன் துணையுடன் வாய்க்கால் பகுதிகளை பலர் ஆக்கிரமிப்பு செய்து கட்டிடங்களை கட்டியும் சில இடங்களில் கட்டிடங்கள் கட்டுவதற்கும் வேலைகள் நடைபெற்று வருகிறது.

மேற்கண்ட வாய்க்காலில் உள்ள ஆக்கிரமிப்பு குறித்து முதல்வர் தனிப்பிரிவுக்கு புகார் கொடுத்திருந்த நிலையில், அப்புகார் மீது பொன்மலை கோட்ட நில அளவை நகர சார் ஆய்வாளர் அளவீடு செய்து அறிக்கை வழங்க கோரி திருச்சி மேற்கு வட்டாட்சியர் குறிப்பாணை வழங்கியும் கடந்த மூன்று மாதமாக பொன்மலை–கோட்ட நில அளவை நகர சார் ஆய்வாளர் திருமதி. பரிமளா அவர்கள் சம்பந்தப்பட்ட நகர அளவுகளை அளவீடு செய்தால் எங்கே அதில் உள்ள ஆக்கிரமிப்புகள் வெளியே தெரிந்துவிடுமோ என்றும், மேற்கண்ட நகரளவு எண்களை அளவீடு செய்யாமல் ஆக்கிரமிப்புதாரர்களிடம் லஞ்சம் வாங்கி கொண்டும், இது நாள் வரை அளவீடு செய்யாமல் காலதாமதம் செய்து வருகிறார்.

மேற்படி புகார் தொடர்பாக திருச்சி மேற்கு வட்டாட்சியர்அலுவலக கடித நாள் 27.10.2023–ன்படி பொன்மலை கோட்ட நகர சார் ஆய்வாளர் நில அளவை செய்து அறிக்கை கோரப்பட்டு மூன்று மாதங்களுக்கு மேலாக வட்டாட்சியர் அவர்களின் உத்தரவை மதிக்காமலும், மற்றும் நீர்நிலை ஆக்கிரமிப்பு குறித்து உரிய நில அளவை செய்யாமலும் வேண்டுமென்றே காலம் தாழ்த்தி வருகின்றார்.

மேற்படி ஆறு சர்வே எண்ணில் உள்ள நீர்நிலை ஆக்கிரமிப்பு குறித்த முழு விவரம் அறிய பொன்மலை கோட்ட நகர சார் ஆய்வாளர் அவர்களை கொண்டு அளவீடு செய்து அதன்படி மேற்கண்ட ஆக்கிரமிப்புகளை அகற்ற உரிய உத்தரவு வழங்கியும் நீர்நிலை ஆக்கிரமிப்பு பற்றி புகார் கொடுத்தும் நடவடிக்கை எடுக்காமல் இருந்த டவுன் சர்வேயர் திருமதி.பரிமளா மற்றும் இளநிலை பொறியாளர் திரு.பாவா பக்ருதீன் ஆகியோர் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்''

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 22.1.2024 மற்றும் 24.7.2024 நாளிட்ட கடிதங்களின் மூலம் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு குழு அலுவலகம்4ன் உதவி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலம் 4–ன் உதவி ஆணையர் தனது 02.02.2024 மற்றும் 03.01.2025 நாளிட்ட அறிக்கைகளில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

“மனுதாரர் கூறியுள்ள சர்வே வார்டு AB, பிளாக் எண் 9, நகரளவை எண்.1/1 சர்வே வார்டு AB , பிளாக் எண் 9, நகரளவை எண். 1/3, சர்வே, வார்டு AB, பிளாக் எண் 1, நகரளவை எண் 1, சர்வே வார்டு AB பிளாக் எண் 8, நகரளவை எண் 1, சர்வே வார்டு AB பிளாக் எண். 8, நகரளவை எண்2, சர்வே வார்டு AB, பிளாக் எண் 8, நகரளவை எண். 14 ஆகிய பகுதிகளில் உள்ள நீர் நிலை ஆக்கிரமிப்பு தொடர்பாக வார்டு AB பிளாக் எண் 9, நகரளவை எண்.1/1 வார்டு AB, பிளாக் எண்.9, நகரளவை எண் 1/3 ஆகிய நீர் நிலைகளில் ஆக்கிரமித்து கட்டுமானங்கள் கட்டுவதற்கு மாநகராட்சியில் அனுமதி ஏதும் வழங்கப்படவில்லை என்றும், மேலும் வார்டு AB, பிளாக் எண்.9, நகரளவை எண்.2–ல் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுமானத்திற்கான திட்ட அனுமதி இணை இயக்குநர்/உறுப்பினர் செயலர்/மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருச்சிராப்பள்ளி அவர்களால் வழங்கப்பட்டது என்றும், நீர்வள ஆதாரத்துறைக்கு சொந்தமான உய்யக்கொண்டான் வாய்க்கால் கரை

சாலையினை பயன்படுத்திக் கொள்ள பொதுப்பணித்துறை, நீர்வள ஆதாரத்துறை அவர்களால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும், அதன் அடிப்படையில் தான் மாநகராட்சி கட்டிட அனுமதி வழங்கியுள்ளது என்றும், மேலும் மனுதாரர் தெரிவித்துள்ளவாறு மாநகராட்சியினால் நீர் நிலை ஆக்கிரமிப்புகள் ஏதும் அனுமதித்து கட்டிட அனுமதிகள் வழங்கப்படவில்லை என்றும், நகர்சார் ஆய்வாளரின் அறிக்கை பெறப்பட்டவுடன் ஆக்கிரமிப்பு ஏதும் இருப்பின் அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், மேலும், பொன்மலை கோட்டம் வார்டு AB, பிளாக் 9, நகரளவை எண் 1/1 என்ற நகரளவை பதிவேட்டில் பழைய புல எண்.49/P சர்க்கார் புறம்போக்கு விஸ்தீரணம் 0.2629.0 சதுர மீட்டர் வாய்க்கால் எனவும், நகரளவை எண்.1/3 என்பது சர்க்கார் புறம்போக்கு பரப்பு 0.1833.0 ச. மீட்டர் வாய்கால் எனவும், வார்டு AB, பிளாக் 8, நகரளவை எண்.1 என்பது சர்க்கார் புறம்போக்கு பரப்பு 0.0400.0 ச.மீட்டர் வாய்கால் எனவும், நகரளவை எண்.2 என்பது சர்க்கார் புறம்போக்கு பரப்பு 0.0685.0 ச.மீட்டர் ஆற்றங்கரை எனவும், நகரளவை எண்.14 என்பது சர்க்கார் புறம்போக்கு 0.0132.0 ச.மீட்டர் வாய்க்கால் எனவும், வார்டு AB பிளாக் 1, நகரளவை எண் 1, என்பது சர்க்கார் புறம்போக்கு பரப்பு 2.5155.0 ச.மீட்டர் வாய்க்கால் எனவும் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், நகரளவை எண் 1/1 என்பது நீர் நிலை புறம்போக்கு என உள்ளதால் பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் அவர்களுடன் கூட்டு தணிக்கை மேற்கொள்ளப்பட்டு அதன் பின்னர்அளவு பணி மேற்கொண்டு ஆக்கிரமிப்புகள் இருப்பின் அதனை அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்க இயலும் என்று தெரிவித்துள்ளார். மேலும் பிளாக் எண் 9, நகரளவை எண்.1/1–இல் 0.0021.0 ச.மீட்டர் அளவிற்கும், நகரளவை எண்.1/1–இல் 0.0021.0 ச.மீட்டர் அளவிற்கும் ஆக கூடுதல் 0.0042.0 ச.மீட்டர் அளவிற்கு ரெங்கசாமி மகன் கார்த்திக் என்பவர் சுற்றுச்சுவர் அமைத்து ஆக்கிரமிப்பு செய்துள்ளார் எனவும், நகரளவை எண்.1/1–இல் 0.0040.0 ச.மீட்டர் அளவிற்கு (1) முருகன், (2) குழந்தைவேல், (3) குமரன் (4) ராசப்பன் மகன் மனோகரன் ஆகியோர் வேலி கற்கள் நட்டு ஆக்கிரமிப்பு செய்துள்ளனர் என்றும், வார்டு AB பிளாக் 9, நகரளவை எண்.1/3, பிளாக் 8, நகரளவை எண்.1,2,14 ஆகிய நகரளவை எண்களில் அளவுப்பணி மேற்கொண்டதில் ஆக்கிரமிப்புகள் ஏதும் இல்லை என்றும், மேலும் வார்டு AB பிளாக் 1, நகரளவை எண். 1–இல் புல்களாக இருப்பதால் அளவுப்பணி மேற்கொள்ள இயலாத நிலை உள்ளதாகவும், மேலும் நகரசார் ஆய்வாளர் வார்டுக்குழு அலுவலகம் 4 அவர்களின் அறிக்கையின்படி வார்டு AB பிளாக்9, நகரளவை எண்.1/1இல் 0.0042.0 ச.மீட்டர் அளவிற்கும், மற்றும் 0.0040.0 ச.மீட்டர் அளவிற்கும் ஆக்கிரமிப்புகள் உள்ளதால் பொதுப்பணித்துறை ஆற்று பாதுகாப்பு கோட்டம், செயற்பொறியாளர் அவர்களுக்கு மேற்படி ஆக்கிரமிப்புகள் அகற்றுவது குறித்து விவரங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.''

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 06.01.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 27.12.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 6.01.2025 அன்று நடைபெற்ற விசாரணைக்கு தனது உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் வர இயலாது என்றும் வேறொரு தேதியில் விசாரணைக்கு உத்திரவிடுமாறு 06.01.2025 நாளிட்ட மின்னஞ்சலில் கோரியிருந்தார்.

6. திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, வார்டு குழு அலுவலகம் 4–ன் உதவி செயற்பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளர் ஆகியோர் 06.01.2025 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்.

மனுதாரர் தெரிவித்துள்ள வார்டு AB பிளாக் 9, நகரளவை எண்.1/1, வார்டு AB, பிளாக் 9, நகரளவை எண்.1/3 ஆகிய நீர் நிலைகளில் ஆக்கிரமித்து கட்டுமானங்கள் கட்டுவதற்கு மாநகராட்சியால் அனுமதி ஏதும் வழங்கப்படவில்லை. இதில் கட்டுமானங்கள் ஏதும் இல்லை. பொன்மலை கோட்டம் வார்டு AB, பிளாக் 9, நகரளவை எண்.1/1, நகரளவை பதிவேட்டில் பழைய புல எண்.49 பாகம் சர்க்கார் புறம்போக்கு விஸ்தீரணம் 0.2629.0 சதுர மீட்டர் வாய்க்கால் என பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் நகரளவை 1/1என்பது நீர்நிலை புறம்போக்கு என உள்ளதால் பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் அவர்களுடன் கூட்டு புலத்தணிக்கை மேற்கொள்ளப்பட்டு பொதுப்பணித்துறை மூலம் ஆக்கிரமிப்புகள் அகற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மனுதாரர் புகாரில் தெரிவித்துள்ள AB பிளாக் 9, சர்வே எண்.1/3, பிளாக் 8, சர்வே எண்.1, 2, 14 ஆகிய சர்வே எண்களில் ஆக்கிரமிப்புகள் ஏதும் இல்லை.

மேலும் மனுதாரர் தெரிவித்துள்ள அடுக்குமாடி குடியிருப்புகள் வார்டு AB, பிளாக் 9, நகரளவு எண்.2 ஆகும். அவ்விடத்தில் கட்டுமானத்திற்காக திட்ட அனுமதி இணை இயக்குநர்/உறுப்பினர் செயலர், மாவட்ட நகர ஊரமைப்பு நகர் கூட்டமைப்பு அலுவலகம், திருச்சிராப்பள்ளி அவர்களால் வழங்கப்பட்டது.

நீர்வள ஆதாரத்துறைக்கு சொந்தமான உய்யக்கொண்டான் வாய்க்கால் சாலையினை பயன்படுத்திக் கொள்ள செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை நீர்வள ஆதாரத்துறை அவர்களின் கடித எண்.6033/2020/கோ.30 TC/வ1 நாள் 31.12.2020 கடிதத்தின் மூலம்அனுமதி வழங்கப்பட்டது. அதன் அடிப்படையிலே தான் மாநகராட்சியால் கட்டிட அனுமதி வழங்கப்பட்டது. மேலும் பிளாக் எண்.9, நகரளவை எண்.1/1 –ல் திரு.ரெங்கசாமி மகன் திரு.கார்த்திக் என்பவர் 0.0042.0 சதுர மீட்டர் அளவிற்கு சுற்றுச்சுவர் அமைத்து ஆக்கிரமிப்பு செய்துள்ளார். மேலும் 0.0040.0 சதுர மீட்டர் அளவிற்கு வேறு சிலர் வேலி கற்கள் நட்டு ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். 03.01.2025 நாளிட்ட கடிதத்தில் ஆற்று பாதுகாப்பு கோட்டம், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் அவர்களுக்கு மேற்படி ஆக்கிரமிப்புகள் அகற்றவும், வார்டு AB, பிளாக் 1, நகரளவை எண். 1–இல் முட்புதர் அகற்றி கொடுத்தால் நகரளவையரை கொண்டு அளவீடு செய்திடவும் கோரப்பட்டுள்ளது.

மனுதாரர் தெரிவித்துள்ள சர்வே புல எண்களில் மாநகராட்சியினால் நீர்நிலை ஆக்கிரமிப்புகள் அனுமதித்து கட்டிட அனுமதிகள் ஏதும் வழங்கப்படவில்லை.

மேலும் திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் மண்டலம் 4–ன் உதவி ஆணையரின் 03.01.2025 நாளிட்ட அறிக்கையில் கண்டுள்ள விவரங்களை எங்களது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்."

மனுதாரரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 21.01.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 07.01.2025 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

7. 21.01.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் மனுதாரர் நேரடியாக விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

| | |
|---|---|
| அ) | வார்டு AB பிளாக் 9, நகரளவை எண்.1/1-ல் 0.2629.0 ச.மீட்டரும் |
| ஆ) | வார்டு AB பிளாக் 9, நகரளவை எண்.1/3-ல் 0.1833.0 ச.மீட்டரும் |
| இ) | வார்டு AB பிளாக் 1, நகரளவை எண்.1–ல் 2.5155.0 ச.மீட்டரும் |
| ஈ) | வார்டு AB பிளாக் 8, நகரளவை எண்.1–ல் 0.400.0 ச.மீட்டரும் |
| உ) | வார்டு AB பிளாக் 8, நகரளவை எண்.2–ல் 0.685.0 ச.மீட்டரும் |
| ஊ) | வார்டு AB பிளாக் 8, நகரளவை எண்.14–ல் 0.132.0 ச. மீட்டரும் |

ஆகிய ஆறு நகரளவை எண்ணில் உள்ள மாவட்ட நீதிமன்ற அருகில் உள்ள எம்.ஜி.ஆர். சிலை முதல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் பின்புறம் வரை உள்ள உய்யக்கொண்டான் வாய்க்காலில் திருச்சி மாநகராட்சி பொன்மலை கோட்ட இளநிலை பொறியாளர் திரு.பாவா பக்ருதீன் துணையுடன் வாய்க்கால் பகுதிகளை பலர் ஆக்கிரமிப்பு செய்து கட்டிடங்களை கட்டியும் சில இடங்களில் கட்டிடங்கள் கட்டுவதற்கும் வேலைகள் நடைபெற்று வருகிறது.

மேற்கண்ட வாய்க்காலில் உள்ள ஆக்கிரமிப்பு குறித்து முதல்வர் தனிப்பிரிவுக்கு புகார் கொடுத்திருந்த நிலையில் அப்புகார் மீது பொன்மலை கோட்ட நில அளவை நகர சார் ஆய்வாளர் அளவீடு செய்து அறிக்கை வழங்க கோரி திருச்சி மேற்கு வட்டாட்சியர் குறிப்பாணை வழங்கியும் கடந்த மூன்று மாதமாக பொன்மலை கோட்ட நில அளவை நகர சார் ஆய்வாளர் திருமதி.பரிமளா அவர்கள் சம்பந்தப்பட்ட நகர அளவுகளை அளவீடு செய்தால் எங்கே அதில் உள்ள ஆக்கிரமிப்புகள் வெளியே தெரிந்துவிடுமோ என்றும், மேற்கண்ட நகரளவு எண்களை அளவீடு செய்யாமல் ஆக்கிரமிப்புதாரர்களிடம் லஞ்சம் வாங்கி கொண்டும், இது நாள் வரை அளவீடு செய்யாமல் காலதாமதம் செய்து வருகிறார்.

மேற்படி புகார் தொடர்பாக திருச்சி மேற்கு வட்டாட்சியர்அலுவலக கடித நாள் 27.10.2023–ன்படி பொன்மலை கோட்ட நகர சார் ஆய்வாளர் நில அளவை செய்து அறிக்கை கோரப்பட்டு மூன்று மாதங்களுக்கு மேலாக வட்டாட்சியர் அவர்களின் உத்தரவை மதிக்காமலும், மற்றும் நீர்நிலை ஆக்கிரமிப்பு குறித்து உரிய நில அளவை செய்யாமலும் வேண்டுமென்றே காலம் தாழ்த்தி வருகின்றார்.

மேற்படி ஆறு சர்வே எண்ணில் உள்ள நீர்நிலை ஆக்கிரமிப்பு குறித்த முழு விவரம் அறிய பொன்மலை கோட்ட நகர சார் ஆய்வாளர் அவர்களை கொண்டு அளவீடு செய்து அதன்படி மேற்கண்ட ஆக்கிரமிப்புகளை அகற்ற உரிய உத்தரவு வழங்கியும் நீர்நிலை ஆக்கிரமிப்பு பற்றி புகார் கொடுத்தும் நடவடிக்கை எடுக்காமல் இருந்த டவுன் சர்வேயர் திருமதி.பரிமளா மற்றும் இளநிலை பொறியாளர் திரு.பாவா பக்ருதீன் ஆகியோர் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்."

முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு குழு அலுவலகம் 4–ன் உதவி ஆணையரின் அறிக்கைகள், உதவி செயற்பொறியாளர் மற்றும் இளநிலைபொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

திருச்சி மாநகராட்சி பொன்மலை கோட்டத்திற்கு உட்பட்ட மாவட்ட நீதிமன்றம் அருகில் உள்ள எம்.ஜி.ஆர் சிலை முதல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வரை உள்ள (அ) வார்டு AB பிளாக் 9. நகரளவை எண்.1/1-ல் 0.2629.0 ச.மீட்டரும் (ஆ) வார்டு AB பிளாக் 9, நகரளவை எண்.1/3-ல் 0.1833.0 ச.மீட்டரும், (இ) வார்டு AB பிளாக் 1, நகரளவை எண்.1–ல் 2.5155.0 ச.மீட்டரும் (ஈ) வார்டு AB பிளாக் 8, நகரளவை எண்.1–ல் 0.400.0 ச.மீட்டரும் (உ) வார்டு AB பிளாக் 8, நகரளவை எண்.2–ல் 0.685.0 ச.மீட்டரும்(ஊ) வார்டு AB பிளாக் 8, நகரளவை எண்.14–ல் 0.132.0 ச. மீட்டரும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளதாகவும், நகர சார் ஆய்வாளர் அவர்களை இதனை அளவீடு செய்யுமாறு உத்திரவிட்டும் ஆக்கிரமிப்புதாரர்களிடம் இலஞ்சம் பெற்றுக்கொண்டு நடவடிக்கை எடுக்காமல் உள்ளார் என தெரிவித்து தனது மனுவின் மீது விசாரணை மேற்கொண்டு குறிப்பிட்ட கால அவகாசத்தில் மேற்கண்ட ஆக்கிரமிப்புகளை அகற்ற உத்திரவிடுமாறும் மேலும் நடவடிக்கை எடுக்காத நகர சார் ஆய்வாளர் மற்றும் இளநிலை பொறியாளர் ஆகியோர் மீது உரிய துறை ரீதியான நடவடிக்கை எடுக்குமாறு மனுதாரர் கோரியுள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள வார்டு AB பிளாக் 9, நகரளவை எண் 1/1 வார்டு AB பிளாக் 9, நகரளவை எண்.1/3 ஆகிய நீர் நிலைகளில் கட்டிடம் கட்டுவதற்கு மாநகராட்சியால் அனுமதி வழங்கப்படவில்லை என்பதும், வார்டு AB, பிளாக் 9, நகரளவை எண்.1/1 சர்க்கார் புறம்போக்கு வாய்க்கால் என பதிவு செய்யப்பட்டுள்ளதும், பொதுப்பணித்துறையுடன் கூட்டு தணிக்கை மேற்கொள்ளப்பட்டு ஆக்கிரமிப்புகள் அகற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும், வார்டு AB பிளாக் 9, சர்வே எண்.1 பிளாக் 8, சர்வே எண்.1,2,14 ஆகியவற்றில் ஆக்கிரமிப்புகள் எதும் இல்லை என்பதும், நீர்வள ஆதாரத்துறைக்கு சொந்தமான உய்யக்கொண்டான் வாய்க்கால் சாலையினை பயன்படுத்திக் கொள்ள நீர்வள ஆதாரத்துறை அனுமதி அளித்துள்ளது என்பதும், மேலும் பிளாக் எண் 9, நகரளவை எண் 1 /1ல் திரு ரெங்கசாமி மகன் திரு கார்த்திக் என்பவர் 0.0042.0 ச.மீட்டர் அளவிற்கு சுற்றுச்சுவர் அமைத்து ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்பதும், மேலும் 0.0040.0 ச.மீட்டர் அளவிற்கு சிலர் வேலி கற்கள் நட்டு ஆக்கிரமிப்பு செய்துள்ளனர் என்பதும் மேற்படி ஆக்கிரமிப்புகள் மற்றும் வார்டு AB பிளாக் 1, நகரளவை எண்.1–இல் முட்புதர் ஆகியவற்றை அகற்றி கொடுத்தால், நகரளவையரை கொண்டு அளவீடு செய்ய இயலும் என்பதும், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு குழு அலுவலகம் 4–ன் உதவி ஆணையரின் அறிக்கை மற்றும் உதவி செயற்பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவற்றின் மூலம்அறிய முடிகிறது.

எனவே, இந்நேர்வில் மனுதாரர் தன்னுடைய மனு மற்றும் இணைத்துள்ள ஆவணங்களில் வார்டு AB, பிளாக் 9, 1/1, 1/3, பிளாக் 1, பிளாக் 8–ல் 1,2,14 ஆகியவற்றில் ஆக்கிரமிப்புகள் உள்ளதாக குறிப்பிட்டுள்ளார். வார்டு AB, பிளாக் 9, நகரளவை எண்.1/1 என்பது நீர்நிலை புறம் போக்கு என பதிவு உள்ளதாலும், ஆக்கிரமிப்புகள் உள்ளதாக தெரிவிக்கப்பட்டிருப்பதாலும், வார்டு AB, பிளாக் 9, சர்வே எண்.1/3, மற்றும் வார்டு AB, பிளாக் 8, சர்வே எண்.1,2,14 ஆகியவற்றில் ஆக்கிரமிப்புகள் ஏதும் இல்லையென்று தெரிவித்து இருந்த போதிலும், மேற்கண்ட புலங்கள் அனைத்தையும் பொதுப்பணித்துறை, செயற்பொறியாளர் அவர்களுடன் கூட்டு தணிக்கை மேற்கொண்டு மேற்கண்ட நகரளவை எண்களில் ஆக்கிரமிப்புகள் உள்ளதா என கள ஆய்வு மேற்கொண்டு அவ்வாறு ஆக்கிரமிப்புகள் இருப்பின் உரிய தொடர் நடவடிக்கை எடுக்குமாறு திருச்சிராப்பள்ளி வார்டு குழு அலுவலகம் 4ன் உதவி ஆணையருக்கு உத்திரவிடுமாறு, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது. மேலும் பாதுகாப்பு கோட்டம், பொதுப்பணித்துறை ஆக்கிரமிப்புகள் மற்றும் முட்புதர்களை அகற்றி கொடுத்தால் நகரளவையரை கொண்டு அளவீடு செய்ய இயலும் என்று திருச்சிராப்பள்ளி வார்டுகுழு 4–ன் உதவி செயற்பொறியாளர் மற்றும் இளநிலை பொறியாளர் தெரிவித்துள்ள நிலையில், ஆற்று பாதுகாப்பு கோட்டம், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் அவர்களுக்கு ஆக்கிரமிப்புகள் குறித்து திருச்சிராப்பள்ளி மாநகராட்சி வார்டு குழு

அலுவலகம் 4–ன் உதவி ஆணையருடன் இணைந்து செயல்படவும் அறிவுரை வழங்கி இம்முறைமன்றம் ஆணையிடுகிறது. மேலும் ஆக்கிரமணங்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கத் தவறிய அலுவலர்கள் மீது துறை நடவடிக்கை எடுக்க பரிந்துரைக்கப்படுகின்றது.

2025–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 13–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு த. விக்னேஸ்வரன்,
எண் 71, 5வது தெரு, அருணாச்சல நகர், கிராப்பட்டி,
திருச்சிராப்பள்ளி 620 012.

2) ஆணையர்,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
எண். 58 பாரதிதாசன் சாலை, திருச்சிராப்பள்ளி 620 001.

3) உதவி ஆணையர்,
வார்டு குழு அலுவலகம் 4,
திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,Trichy Toll Gate,
திருச்சிராப்பள்ளி 620 004.

4) செயற்பொறியாளர்,
பாதுகாப்பு கோட்டம், பொதுப்பணித்துறை,
நீதி மன்ற வளாகம், திருச்சிராப்பள்ளி–620 001.

5) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண். 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

6) இணை இயக்குநர்,
ஒருங்கிணைப்பாளர் (Nodal officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ. கோ. / உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

சட்ட ஆலோசகர்/செயலாளர் (FAC).